அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 319/2010 RCOP: /

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.V.நாகேஸ்வரி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டின் 10 வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 22–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

வா.சா.1 22.01.2025

பெயர் சௌந்தர்ராஜன் தந்தை/ கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

<u>12 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:–

9. பிரமாணவாக்கு மூலத்தில் பத்தி 36 ல் ஒரு உயில் பற்றி குறிப்பிட்டுள்ளேன் மேற்படி உயிலின் சர்வே எண் எதாவது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். மேற்படி உயில் போலியானது என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தா சின்னசாமியை 12 வது பிரதிவாதிதான் கவனித்து பராமரித்துவந்தார் என்று சொன்னால் சரியல்ல எனது தாயார் பார்த்துவந்தார்

10. உயில் 1972 ல் எழுதப்பட்டது. எனக்கு உயில் பற்றிய விவரம் எதுவும் எனக்கு தெரியாது அந்த உயில் மூலம் எந்த உரிமையும் எனக்கு கிடையாது என்று சொன்னால் சரியல்ல. மாசிலாமணி எனது பெரியப்பா

நடராஜன் எனது அப்பா, வேதாசலம் எனது சித்தப்பா. தாவா சொத்தை குறித்து எனது தந்தை எந்த ஆவணமும் எழுதிவைக்கவில்லை . 1977 ல் எனது ஆயா எழுதிவைத்த உயில் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் புரெபைட் செய்யப்பட்டது.

11. உயிலில் சொத்து குறித்த சர்வே எண் எதுவும் கிடையாது ஆகவே அந்த உயில் மூலம் எந்த உயில் பரிமாற்றமும் நடைபெறவில்லை என்றாலும் 12 வது பிரதிவாதியின் பாகத்தை குறித்து நான் எந்த பரிகாரமும் பெறஇயலாது என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல. 12 வது பிரதிவாதிதான் அவரது பாகத்தில் தற்போது வரை 40 ஆண்டுகாலமாக அனுபவித்து உள்ளார் ஆகவே நான் கோரிய பரிகாரம் கிடைக்க தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல, 12 வது பிரதிவாதி அவரது தகப்பனார் ஒதுக்கிய சொத்தில் தான் இருக்கிறார்.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.